# இலங்கை சுற்றுலாத் துறையின் முன்னணி நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்

# இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) என்பது சுற்றுலா மற்றும் அது சார்ந்த தொழில்களின் திட்டமிடல், அபிவிருத்தி, ஒழுங்குபடுத்துதல் மற்றும் கொள்கை அமுலாக்கம் ஆகியவற்றுடன் பணிபுரியும் அரசாங்க நிறுவனமாகும். சுற்றுலாத் துறையானது தேசிய அளவில் முக்கியமான பங்களிப்புச் செய்யும் துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எதிர்காலத்தின் பொருளாதாரத்திற்கு இந்தத் துறையானது மிக உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் உயர் மட்டத்திலான முதலீட்டாளர் திட்டங்களை நாட்டிற்குள் ஈர்க்கிறது.

## உதவிப் பணிப்பாளர் / நிதி முகாமைத்துவம்

பதவியை வகிப்பவர் சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் (TDF) ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கண்காணிக்கும் பொறுப்பை பொறுப்பேற்க வேண்டும். உதவிப் பணிப்பாளர், நிதிக் குழுவுடன் இணைந்து துல்லியமான நிதிப் பதிவுகளைப் பராமரிக்கவும், மூலோபாய நிதி முடிவுகளை எடுப்பதில் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு உதவ வேண்டும்.

**பணி**

- சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தை மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல்.
- சுற்றுலா அபிவிருத்தி நிதி பொது பதிவேட்டை துணை ஆவணங்களுடன் முறையாகப் பராமரிப்பதற்குப் பொறுப்பு கூற வேண்டும்.
- சுற்றுலா அபிவிருத்தி நிதி அறிக்கைகளைத் தயாரித்து இறுதி செய்தல்.
- சேகரிக்கப்பட்ட நிதியை ஏனைய நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிப்பதை மதிப்பாய்வு செய்து தயார் செய்தல்.
- பதிவுசெய்யப்பட்ட சுற்றுலா நிறுவனங்களுக்கு விதிக்கப்படும் சுற்றுலா அபிவிருத்தி வரியை மேற்பார்வையிட்டு கையாளுதல்.
- அனைத்து சுற்றுலா அபிவிருத்தி நிதி கணக்கீடுகளும் அதிகாரசபையின் விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க உள்ளனவா என்பதை சரிபார்த்தல்.
- சுற்றுலா அபிவிருத்தி வரி தொடர்பான விசாரணைகளுக்கான தகவல்களை வழங்குதல், சுற்றுலா அபிவிருத்தி வரி செலுத்துவோருடன் தொடர்புகொள்வது மற்றும் முறைப்பாடுகளைத் தீர்த்து வைத்தல்.
- வங்கி சமரசம் உட்பட பதிவேட்டுக் கணக்குகளை ஆராய்ந்து சமரசம் செய்தல்.
- சுற்றுலா அபிவிருத்தி நிதி தொடர்பில் முகாமைத்துவத்திற்குத் தேவையான ஏதேனும் கட்டுப்பாடுகளை பரிந்துரைத்தல்.
- அட்டவணைகள், பதில்கள் மற்றும் துணைப் பொருட்களைத் தயாரிப்பதிலும் நடைமுறைகளை விளக்குவதிலும் கணக்காய்வாளர்களுக்கு உதவுதல்.
- அதிகாரசபையின் பணிப்பாளர் / நிதி முகாமைத்துவம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் ஒதுக்கப்பட்ட ஏனைய கடமைகளைச் செய்தல்.

**எதிர்பார்க்கப்படும் நபர்**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள்***

அபேட்சகர் அ அல்லது ஆ வைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / வர்த்தகம் / முகாமைத்துவம் தொடர்பான பாடத்துறைகளில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

பட்டம் / தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான விடயத்துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

ஆ. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (ICASL)/ பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் நிறுவனத்தின் (CIMA)/ சான்றுபடுத்திய ஒன்றிணைந்த கணக்காளர்களின் சங்கத்தின் (ACCA) / இலங்கை முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CMA) இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

பட்டம் / தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான விடயத்துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

***உள்வாரி விண்ணப்பதாரிகள்***

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**அல்லது**

2. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் கனிஷ்ட முகாமைத்துவ (JM 1-2) சேவை வகுதியில் IIஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**சம்பள அளவு**

MM-1-1 - ரூபா 94,170 – 10 x ரூபா 2,480– 15 x ரூபா 3,450 - ரூபா 170,720 ஆகும்.

**ஆரம்பச் சம்பளம்** - ரூபா 73,436 + வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு

**அனுகூலங்கள்**

- ஊழியர் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்
- போக்குவரத்துக் கொடுப்பனவு
- தொடர்பாடல் கொடுப்பனவுகள்
- தொழில்சார் கொடுப்பனவுகள்
- கடன் வசதிகள்
- தொழில் மேம்பாட்டிற்கான பயிற்சி

இந்தப் பதவிக்கான சரியான நபர் நான்தான் என நீங்கள் நினைத்தால் தயவு செய்து உங்களது சுய தரவுகள் சகிதம் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பங்குபற்றிய கல்வி / தொழில்சார் தகைமைகள் மற்றும் வேலை அனுபவம் மற்றும் உறவினரல்லாத இரண்டு சான்று பகர்வோரின் பெயர்களுடன் பின்வரும் முகவரிக்கு 2025 மே 09ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘உதவிப் பணிப்பாளர் / நிதி’’ என தயவுசெய்து குறிப்பிடவும்.

**தலைவர்,**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை,**
**80, காலி வீதி, கொழும்பு-03.**